1973 பிப்ரவரி 12]

களேயாளுல் அதைப் பற்றி விசாரித்திருக்கக்கூடும். இந்த ஆடுகளும் இதற்கு முன்னுல் கொண்டுவரப்பட்ட ஆடுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றுதான் அறிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : These goats and sheep thrive very well in Hosur and Denkanikota taluks on account of cool climate there. May I know from the Hon. Minister whether a sheep farm will be started there to improve the stock?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Nowadays, it is not the intention of the Government to start a farm for every particular type of cattle. The cattle farm which is at present at Hosur is capable of also having sheep or goat in that farm.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது இறக்குமதி செய்யப்பட்டிருக்கிற செம்மறியாடுகளின் விசேஷத் தன்மைகள் என்ன என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவை குளிர்நாட்டில் வளர்ந்த இனம் என்ற காரணத்திஞல் அவை மிக அதிக அளவிற்கு ஏறத்தாழ 13 கிலோ கிராம் அளவிற்கு கம்பளி தரக்கூடியவை, ஒரு முறை கம்பளி எடுக்க வெட்டுகிறபோது. நம் நாட்டு செம்மறி ஆடுகள் ஒரு புதிய கலப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர் அளவிற்கு கம்பளி தருகிற இனம் உடல் வலிவிலும் அதிகக் கனம் உள்ளதாக வளர வாய்ப்பிருக்கிறது. எனவே, அதிக எடை உள்ள தாகவும் அதே நேரத்தில் அதிகப்படி கம்பளி உற்பத்தி செய்வதற்கும் ஒரு புதிய கல்ப்பினத்தைத் தோற்றுவிக்க அது உதவும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : இப்போது ஆட்டு இறைச்சியின் விலே விஷம் போல் ஏறிவருகிறது. இப்போது நெல் உற்பத்தியில் தீவிரத் திட்டத்தின்கீழ் ஐ.ஆர். 8 போன்றவை உற்பத்தி செய்யப்படுவதைப் போல் ஆடுகளே அதிகப்படி உற்பத்தி செய்ய ஒரு தீவிரத் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போதே ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு ஆடு வளர்ப்புச் சங்கங்களே ஆங்காங் குள்ள விவசாயிகள் ஏற்படுத்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் ஒரு நல்ல இன ஆடு இருக்கிறது. அந்த இன ஆட்டை, மேய்ச்சேரி என்பதை, அதிகமாகப் பரப்பச் செய்வதற்கு

ஒரு முயற்சி இருக்கிறது. அதேபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ்க்கரிசல் என்ற இனத்தை அதிகப்படி—அவை நல்ல வளர்ச்சி உயரம் உள்ளதாக இருக்கின்றன—பரப்பவும் முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனல், அரசு இலாகாவிலிருந்து முயற்சி எடுக்கும்போது அது 5 சதவிகிதம்தான், பொதுமக்கள் எந்தளவிற்கு இதைப் புரிந்துகொண்டு பயன்படுத்திக்கொள்கிறர்களோ அது 95 சதவிகிதம். அதற்கு இக்கருத்தைப் பறைசாற்றவேண்டியிருக்கிறது. ஓரளவிற்குச் செய்து வருகிறோம்.

திரு. த. சோனேயா : ரஷ்ய நாட்டிலிருந்து வருகிற இந்த ஆடுகள் நம் நாட்டிலுள்ள ஆடுகளைப்போன்ற நிறத்தில் உள்ளனவா அல்லது பலவிதமான கலர்களில் இருக்கின்றனவா, எந்த நிறத்தில் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாட்டிலுள்ள கால்நடைப் பண்ணைகளை எல்லாம், உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ளவைகளை ஒரு முறை சென்று பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்த ஆடுகள் பெரும்பாலும் சாம்பல் நிறம், வெள்ளை நிறம், கொஞ்சம் பழுப்பு நிறம் இந்த அளவிற்குத்தான் இருக்கின்றன.

தமிழ்நாடு நகல் எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்கும் விதிகள்

*128. வின—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நகல் எழுதுபவர்கள் விதி (Tamil Nadu Copy-writes Rules) எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வந்தது?

(இ) அதன்படி எத்தனை பேர்களுக்கு இதுவரை உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) தமிழ்நாடு நகல் எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்கும் விதிகள் (Tamil Nadu Copy-writers Licence Rules) இன்னும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை.

(இ) இவ்வினவிற்கு இடமில்லை.

1973 பிப்ரவரி 12]

கள், சாராயக்கடை ஏலத்தில் கிடைத்த தொகை

*129. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கள், சாராயக் கடைகளின் ஏலத்தொகைகளிலிருந்து பங்கு கோரி, பஞ்சாயத்து யூனியன்கள் எவையேனும் அரசுக்கு விண்ணப்பித்துள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். சில ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மேலும் சில நகராட்சிகளும் விண்ணப்பித்ததை அனுமதிக்க இயலாது என்று அரசு முடிவெடுத்து அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : மதுவிலக்கைத் தள்ளி வைத்துவிட்ட பிறகு கிராமங்களில் உள்ள ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாகக் குடித்துக் கெட்டுப்போய் விடுகிருர்கள். அதை உத்தேசித்தாவது அரசாங்கம் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவருவதற்கு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

திரு. மா. வே. நாராயணசாமி : நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் நிரம்ப இருக்கின்றன. நகராட்சி மன்றங்கள் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு சுகாதார அடிப்படையில் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் எப்படி கேளிக்கை வரி நகராட்சிமன்றத்திற்கு வருகிறதோ அதேபோல் இந்த மதுக்கடைகள் வாயிலாக வரும் வருவாயில் ஒரு பகுதியை நகராட்சி மன்றங்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இயலாது என்று ஏற்கனவே பதிலில் தெரிவித்துவிட்டேன்.

திரு. த. சோனையா : திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் கள்ளுக் கடைகள்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருப்புவனம் பற்றி எப்படிச் சொல்ல முடியும்? பொதுவாகக் கேளுங்கள்.